அரியசந்தர்ப்பம்!
01 — 11 — 93 தொடக்கம்
12 — 11 — 93 வரை
மலிவு விற்பனை
சோபனா
ஆடை அகம்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 27 வெள்ளிக்கிழமை (12 — 11 — 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 349

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# புலிகளின் அதிரடியில் பூநகரித் தளம் வீழ்ந்தது!

# டாங்கிகள், படகுகள் இழந்து படையினர் ஓட்டம்!!

## 200 க்கும் அதிக படையினர் பலி

யாழ்ப்பாணம், நவம்பர் 12

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய அதிவேக அதிரடித் தாக்குதலில் மூன்று இராணுவ முகாம்களையும், ஒரு கடற்படைத் தளத்தையும் கொண்ட பெரும் இராணுவ கூட்டுத் தளம் (MILITARY COMPLEX) அவர்களிடம் வீழ்ந்தது.

நேற்று நடைபெற்ற அதிரடி யுத்தத்தில் டாங்கிகள், ஆறு யுத்தப் படகுகள், பெரும் எண்ணிக்கையான நவீன ஆயுதங்கள் என்பவற்றைக் கைவிட்டு படையினர் தப்பி ஓடினர்.

பூநகரி அதிரடியில் 200க்கும் மேற்பட்ட படையினர் களத்தில் மாண்டனர். 350 பேர் காயமுற்றனர். உயிரிழந்தவர்களில் மேஜர், கப்டன் தரங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் அடங்குவர்.

புலிகள் நடத்திய பூநகரித் தாக்குதல் மிகப் பெரியது என்று சர்வதேச செய்தி நிறுவனங்கள் வர்ணித்தன.

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல் பிரிவு நேற்று அதிகாலை 1.30 மணிக்கு பூநகரிப் பகுதியில் உள்ள நான்கு இராணுவ முகாம்கள் மீதும், நாகதேவன் துறை கடற்படைத் தளம் மீதும் ஒரே நேரத்தில்- சமகாலத் தாக்குதலை நடத்தியது.

மூன்று மணிவரை நீடித்த அதிரடித் தாக்குதலில் இராணுவத் தளங்களும், கடற்படைத் தளமும் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தன.

அந்தத் தாக்குதலில் 200க்கும் அதிகமான இராணுவத்தினரும் கடற்படையினரும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

நர்ச்சந்தி நரவி



இந்தப் பாடத்தோனடயாவது திருந்துவினமோ பார்ப்பம்......!

பூநகரித் தாக்குதல் சம்பந்தமாக 1 ஆம் 5 ஆம் பக்கங்களில் பிரசுரமாகியுள்ள சில செய்திகள் நேற்றைய விசேட பதிப்பில் வெளிவந்தவையாகும்

## ராடர் மத்திய நிலையமும் தாக்கி அழிக்கப்பட்டது!

கொழும்பு, நவ. 12

விடுதலைப் புலிகளினால் நாகதேவன்துறை கடற்படை முகாமும் தாக்கப்பட்டது. இதனால் இம் முகாமில் இருந்த பல கடற்படையினர் கொல்லப்பட்டனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

நாகதேவன்துறை கடற்படை முகாமில் உள்ள ராடர் மத்திய நிலையமும் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் கைப்பற்றிய நவீன ஆயுதங்களில்— குறிப்பாக 5 கிலோ மீற்றர் தூரம் சென்று வெடிக்கும் 120 மி.மி. ரகத் துப்பாக்கிகள் ஆறு உள்ளன என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-6)

## 1, 500 படையினரில் பலர் தப்பி ஓட்டம்

கொழும்பு, நவ. 12

14 கிலோ மீற்றர் நீளம் கொண்ட பூநகரி இராணுவத் தளம் சிறு சிறு முகாம்களை உள்ளடக்கியது என்பதால், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் அங்குள்ள சுமார் ஆயிரத்து 500 படையினரில் பலர் முகாமைவிட்டு தப்பியோடினர் என்றும்—

இதனால் இராணுவத்தினர் பலரைக் காணவில்லை என்றும் செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

இதே வேளை பூநகரித் தாக்குதலின் போது உயிரிழந்த மற்றும் காயமடைந்த படையினரைவிட மேலும் பல சிப்பாய்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல் ஏதும் தெரியவில்லை என்று பி.பி.ஸி. செய்தியாளர் சியாகோறுவாஸ் கொழும்பில் இருந்து அறிவித்தார்.

## 500 புலிப் போராளிகள் தாக்குதல் நடத்தினராம்

பூநகரித் தாக்குதலுக்காக விடுதலைப் புலிகள் தரப்பில் சுமார் 500 போராளிகள் சிறு படகுகளில் வந்து இராணுவ முகாமை அடைந்து இராணுவம் எதிர்பாராத நிலையில் இம்மாபெரும் தாக்குதலை நடத்தியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இதற்கிடையில் —

பூநகரியில் கைப்பற்றிய ஆயுதங்களை எதிர்வரும் சண்டைகளில் இராணுவத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் பயன்படுத்தலாம் என்றும் —

அது இராணுவத்துக்கு பலத்த பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ-6)

## கொழும்பில் படையினர் அதி உஷார் நிலையில்

கொழும்பு, நவ. 12

கொழும்பு மாநகர் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பூநகரித் தாக்குதலைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கையை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு நகரில் ஊடுருவியுள்ளதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளைப் பிடிப்பதற்கான தேடுதலை பொலீஸாரும் படையினரும் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து கொழும்பு நகரில் ஏற்கனவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ-எ)

## மேலதிக படையை தரையிறக்க முடியாது இராணுவம் திணறல்

### பூநகரிப் பகுதி எங்கும் பரவலாக புலிவீரர்கள்

விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த பூநகரிப் பகுதிக்கு மேலதிக படையினரை அனுப்ப முடியாத நிலையில் இராணுவம் திணறிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பூநகரியில் பரந்த அளவில் விடுதலைப் புலிகள் காணப்படுகின்றனர் என்றும் மேலதிக படையினரை இறக்க முயற்சித்த ஹெலிக்கொப்டர்கள் கூட விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்டன என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

இதனால் படையினர் விடுதலைப்புலிகள் மீது விமானத் தாக்குதல்களை நடத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

அப்படி நடத்தப்பட்டால் அத்தாக்குதலினால், விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள்ளாகி இருக்கும் படையினரும் பாதிக்கப்படுவார்கள் என்றும் இராணுவம் தெரிவிக்கிறது.

முற்றுகைக்குள்ளாகி இருக்கும் படையினர் தாங்களாகவே முற்றுகையில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவேண்டும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

— இவ்வாறு பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (ஒ-எ)

## இராணுவத்துக்கு ஏற்பட்ட மிகமோசமான பின்னடைவு

### பி. பி. ஸி. கண்ணோட்டம்

கடந்த பத்து ஆண்டுகளாக நடைபெற்றுவரும் வடக்கு - கிழக்கு யுத்தத்தில் தாங்கள் ஓரளவு வெற்றிகண்டு வருவதாக இராணுவத் தளபதிகள் கூறிவரும் இச்சமயத்தில் —

விடுதலைப் புலிகளினால் பூநகரி படை முகாம்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட மேசமான பின்னடைவாக உள்ளது.

இதை இராணுவத்தினரே ஒப்புக்கொண்டுள்ளனர்.

பூநகரித் தாக்குதல் குறித்து பி.பி.ஸி. சிங்களச் சேவையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி நகரில் நேற்று விமான தாக்குதல்! பெண் பலி!!

### மேலும் எண்மர் காயம்

சாவகச்சேரி நகரில் — பொதுச்சந்தைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இரு சுப்பசொனிக் விமானங்கள் குண்டுவீச்சு நடத்தியதில் பெண் ஒருவர் அவ்விடத்திலேயே பலியானார். மேலும் எண்மர் காயமடைந்தனர்.

சந்தையில் வாழைப்பழம் வியாபாரம் செய்து கொண்டிருந்த மீசாலையைச் சேர்ந்த சு. தெய்வானைப்பிள்ளை (68 வயது) என்பவரே இறந்தவர் ஆவர்.

குண்டு விழுந்த சந்தைப் பகுதியில் பெரிய குழி ஒன்று காணப்படுகிறது. உட்புற மண்டபங்கள் பெரும் சேதமடைந்துள்ளன. சந்தைக் கடைகளில் இருந்த புடவைகள், பல சரக்குப் பொருள்கள்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தி. மு. கழகத்திலிருந்து கோபாலசாமி நீக்கம்!

சென்னை, நவ. 12

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து ராஜ்ய சபை எம். பியான வை. கோபாலசாமி நீக்கப்பட்டார்.

கட்சியின் தேர்தல் பணிச் செயலாளர் [illegible] இருந்தும் சாதாரண உறுப்பினர் பதவியில் இருந்தும் அவர் விலக்கி வைக்கப்பட்டிருப்பதாக தி. மு. க. பொதுச் செயலாளர் க. அன்பழகன் தெரிவித்தார்.

[illegible] சட்டத்திற்கும் மாறாக கோபாலசாமி நடந்து கொண்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கோபாலசாமிக்கு அனுப்பிய கடிதத்தில் திரு. அன்பழகன் தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 போராளிகள் வீரச்சாவு

பூநகரி தளத்தைக் கைப்பற்றும் வீரப் போரில் விடுதலைப் புலிகள் தரப்பில் 40 இற்கும் அதிக போராளிகள் வீரச்சாவடைந்ததாகத் தெரிய வந்தது.

இனப்பிரச்சினையில்

## பூநகரித் தாக்குதல் ஒரு திருப்புமுனை?

கொழும்பு, நவ. 12

இனப்பிரச்சினையில் பூநகரித் தாக்குதல் ஒரு திருப்புமுனையாக இருக்க முடியும்.

இராணுவம் தனது வரையறையை உணர்ந்து கொள்ளவும்— இராணுவத்தால் எதனைச் சாதிக்க முடியும் என்பதை அரசு புரிந்துகொள்ளவும் பூநகரித் தாக்குதல் உதவும்.

சம்பந்தப்பட்ட ஒவ்வொரு வரும் தங்களின் வரையறையை உணர்ந்து கொள்ளக் கூடியதாக பூநகரித் தாக்குதல் அமைந்துள்ளது.

இதனால் அனைவரும் பிரச்சினைக்குத் தீர்வுகாண பேச்சுகளை ஆரம்பிக்க பூநகரித் தாக்குதல் உதவலாம் என்று எண்ணுகின்றேன்.

— இவ்வாறு பிரபல பத்திரிகையாளர் அமல் ஜயசிங்கா பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

## சிங்களவர் அதிர்ச்சி! படை மீது ஆத்திரம்!!

பூநகரியை விடுதலைப் புலிகளிடம் படையினர் இழந்துள்ளது குறித்து தென்பகுதியில் உள்ள மக்கள் அதிர்ச்சி அடைந்திருப்பதாக பி. பி. ஸி. அறிவித்தது.

விடுதலைப் புலிகள் ஒரு சக்தியற்ற அமைப்பு என்று இராணுவத்தினர் கூறி வந்ததற்காக இப்போது இராணுவத்தினர் மீது தென்பகுதி மக்கள் ஆத்திரம் கொண்டிருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (உ-எ)

## பாஷையூரில் ஷெல்! இருவர் மரணம்!!

### மற்றும் இருவர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 12

ஊர்காவற்றுறையிலிருந்து நேற்று பிற்பகல் 2 மணி முதல் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் பாஷையூரில் தாயும், மகனுமாக இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

மற்றும் இருவர் காயமடைந்தனர்.

கிருஷாந்து மலர்ராணி (வயது 43), அவரது மகனான ஜேசுராஜன் (வயது 5) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

உயிரிழந்த மலர்ராணியின் சகோதரி சூசைதாஸ் புஷ்பராணி (வயது 46), அவரது கணவர் தேவசகாயம் சூசைதாஸ் (வயது 48) ஆகிய இருவரும் காயமுற்றனர்.

வீட்டில் இருந்தவர்கள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் பொம்மர் திடீர் றொக்கட் தாக்கு!

### தாய், மகள் உட்பட நால்வர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 11

பூநகரிப் பகுதியில் நேற்று சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் திடீரென யாழ். நகரப் பகுதிக்கு வந்த பொம்மர் ஒன்று றொக்கட் தாக்குதலை நடத்தியது.

காலை 11-00 மணி அளவில் வண்ணார் பண்ணை பிரப்பம் குளம் லேனில் இடம்பெற்ற இத்தாக்குதலில் தாய், மகள் உட்பட நான்கு பெண்கள் காயம் அடைந்தனர்.

ந. நவமணி (வயது 42), ந. சந்திரவதனி (வயது-21) மற்றும் சிவலோகநாதன் சிவபாக்கியம் (75வயது), கே. வள்ளிநாயகி (56வயது) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் நால்வரும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களது வீடும் சேதம் அடைந்தது. (இ-17-15)

நாடாளுமன்றத்தில் நேற்று

## மூலை ஆசனம் ஒன்றில் அமர்ந்திருந்தார் அனுரா

அனுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியாக பதவி ஏற்பதற்கு முன்னர், நேற்று நாடாளுமன்றத்தில் சாதாரணமானவராக அமர்ந்திருந்தார்.

சபாநாயகர் அல் ஹாஜ் முஹம்மது சபைக்கு வந்து தமது ஆசனத்தில் அமரச் சென்ற சமயம், அனுரா தமது ஆசனத்தில் எழுப்பியபோது அவர் இருந்த ஆசனம் தவறி விழுந்துவிட்டது.

எம். பியாகப் பின்னர் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட அனுராவுக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களின் இறுதி வரிசையில் மூலை ஆசனமே வழங்கப்பட்டுள்ளது.

பதவிப் பிரமாணம் செய்த பின்னர் 12 நிமிடங்கள் கழித்து அனுரா சபையை விட்டு வெளியேறிச் சென்றார். (ஒ-எ-6)

# யாழ். மத்திய கல்லூரி பிரதி அதிபராக ஓய்வுபெறும்

# திரு. வே. ஐயாத்துரை அவர்களின் பிரிவுபசார மலர்

## வெள்ளை மனங்களைக் கொள்ளைகொண்டு கல்விப்பணியாற்றியவர்

பள்ளிச் சிறுவர்களின் கள்ளமற்ற மனங்களை கலகலப்பாகக் கற்பித்தல் மூலம் கொள்ளைகொண்டவர் ஆசிரியர் திரு. வே. ஐயாத்துரை அவர்கள். அவர் முப்பத்தி இரண்டு வருடகால ஆசிரிய சேவையில் ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் உயர்வுக்கு உதவிய உத்தமன் ஆவார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராக 1980 ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரை பணியாற்றியவர். 1982 இல் பொருளாளராக பணிபுரிந்த வேளை தன்பண்பினால் எல்லோர் உள்ளமும் கவர்ந்தவர் திரு. ஐயாத்துரை அவர்கள்.

விளையாட்டுத்துறை முதல்வராக 1984 தொடக்கம் 1986 வரை பணியாற்றினார். மீண்டும் 1991 முதல் 1993 வரை பணியாற்றினார்.

ஆசிரியராய் பணிபுரிந்த திரு. ஐயாத்துரை அவர்கள் 1991 ஆம் ஆண்டு பிரதி அதிபர்களில் ஒருவராக பணியேற்றுக் கொண்டார். பாடசாலையின் ஒழுக்கம், கட்டுப்பாடு, கட்டுக்கோப்பு, ஒழுங்கமைப்பு, கற்றல் கற்பித்தல் செயற்பாடு, வினைத்திறன் போன்றவற்றை முதன்மைப்படுத்தும் முகாமையாளராக பணிபுரிந்து, எமது கல்லூரிக்கு பெரும் புகழ் ஈட்டிக்கொடுத்ததுடன் 175 ஆம் ஆண்டின் பிரதி அதிபர் என்ற சிறப்பையும் பெற்றார். அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் கல்விக்கும், சமூகத்துக்கும், பணியாற்றுவதுடன் எமது கல்லூரியின் செயற்பாடுகளில் பங்கு கொண்டு பணிபுரியவும் இறைவன் அருள் பாலிப்பாராக.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## இலட்சிய ஆசான்

1960ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் ஆசிரியர் சேவையில் சேர்ந்தோர் இத் தசாப்தத்தின் நடுப்பகுதி அளவில் இளைப்பாறி விடுவார்கள். 1960ஆம் ஆண்டிலேதான் 'மனியம் பெறும்' பாடசாலைகள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டன. அன்றில் இருந்து கல்வித்துறையில் ஒரு 'புதிய கலாச்சாரம்' தோன்றியது. இது இவ்வாறு அமையுமெனின் 1960க்கு முந்திய காலத்தை 'பழைய கலாச்சாரப்' பகுதியென கூறலாம்.

இக்காலப்பகுதியில் ஆசிரியர் தொழிலில் இணைந்த திரு. வே. ஐயாத்துரை அவர்கள் பழைய கலாச்சாரத்துக்கு அமைய ஆசிரியர் தொழிலை ஒரு உயர்ந்த சேவையாக கருதி ஒரு நாளில் இருபத்திநான்கு மணிநேரங்களும் ஆசிரியராக அமைந்து சிறந்தவர். இது தவிர மாணவர்களின் பூரணத்துவமான வளர்ச்சிக்கு விளையாட்டுத் துறையும் அவசியம் என உணர்ந்த இவர் மாணவர்களை அத்துறையிலும் ஈடுபடுத்தி ஊக்குவித்தலிலும் தனது கவனத்தைச் செலுத்தி ஒரு இலட்சிய ஆசிரியராக விளங்குகிறார்.

இத்தகைய ஒரு இலட்சிய ஆசான் பிரதி அதிபராக உயர்ந்து திறம்பட செயல் ஆற்றியமை வியப்புக்குரிய தொன்றல்லவே.

இப் பெருமகனாருடைய ஓய்வுக்காலம் எல்லா வகையிலும் சிறந்து மகிழ்ச்சி உடையதாக அவருக்கு அமைய வேண்டும் என இறைவனை வேண்டி அமைகின்றேன்.

அ. பஞ்சலிங்கம்
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## மறுசீரமைத்த உப அதிபர்

உப அதிபர் திரு. வே. ஐயாத்துரை கல்வி கற்பிப்பதுடனும் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றியதுடனும் நிற்காமல் பழைய மாணவர் சங்கத்துடனும் தன்னை இணைத்துக்கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்கு பல முனைகளிலும் இருந்து உழைத்தார். குறிப்பாக போர்க்கால சூழ்நிலையில் எமது கல்லூரிக்கு ஏற்பட்ட அனர்த்தங்களுக்குக் கலங்காது முகம்கொடுத்து எமது கல்லூரியை வேறு இடத்துக்கு அகல விடாது அதன் பழைய தென்பைப் பெற தன்னாலான சகலவற்றையும் செய்து கொடுத்தார் என்பதை நன்றியுடன் பழைய மாணவர்களின் சார்பாக நினைவு கூருகிறேன்.

இந்த நல்லாசான் ஆசிரியத் தொழிலினின்றும் இளைப்பாறினாலும் அன்னாரது சேவை தொடர்ந்தும் இக் கல்லூரிக்கும் தமிழ் மக்களுக்கும் கிடைக்க வேண்டும். அவர் தம் அனுபவ ஆற்றல் ஒரு விழுத்துணையாய் அமைய வேண்டும். அவரை நீடூழி வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறோம்.

சு. இராமகிஷ்ருணன்
(தலைவர்)
யாழ். மத்திய கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

## இடருற்ற நேரத்தில் அயராது உழைத்தவர்



திரு. வே. ஐயாத்துரை அவர்கள் 32 வருடகாலக் கல்விச் சேவையை நிறைவு செய்து 12 - 11 - 1993 இல் தமது அறுபதாவது வயதில் இளைப்பாறுகிறார். 12 - 05 - 1980 இல் இருந்து இந் நாள் வரை மத்திய கல்லூரியில் பதினான்கு ஆண்டுகள் சேவையாற்றிய காலப் பகுதியில் இந்து மா மன்றப் பெரும் பொருளாளராகவும், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளராகவும், ஆசிரிய வட்டத் தலைவராகவும்; ஆசிரிய நலன்புரிச் சங்கத் தலைவராகவும், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கச் செயற்குழு உறுப்பினராகவும், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராகவும், பிரதி அதிபர்களுள் மூத்தவராகவும், சிறப்பான பணியாற்றியுள்ளார்.

குறிப்பாக பாடசாலை பல நெருக்கடியான சூழ்நிலைகளுக்குள் இடருற்ற நேரத்தில்; (20-05-91 — 12-11-93), அதன் நிலை தளர்ந்து விடாது வளர்ச்சியடைவதற்குப் பக்க பலமாக நின்று. பெரும் பணியாற்றியுள்ளார். வகுப்பறைக் கற்பித்தல், பிற முயற்சிகள், ஒழுக்கம், கட்டுப்பாடு; சமூக உறவுகளைப் பேணல், திட்டமிடல், முகாமைத்துவம் முதலிய பல்துறைசார் செயற்பாடுகளில்; தமது அனுபவத்தையும் ஆளுமையையும் பயனுள்ள வகையில் பரவலாக்கிப் பங்களிப்புச் செய்து எல்லோரதும் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

நல்லாசானுக்குரிய, நேரந் தவறாமை, கல்வி சொல்ல வல்ல திறன், மாணவரின் வளர்ச்சியில் சிரத்தை, கருமமே கண்ணாக எடுத்த கருமத்தைத் திறம்படச் செய்யும் பண்பு ஆகியவற்றில் ஏனையவர்களுக்கு முன்னுதாரணராகத் தம்மை நிலை நிறுத்தி வந்தார். இவர் பாடசாலைக்கு வராத நாட்கள் மிகமிகக் குறைவாகும். பாடசாலை தொடங்குவதற்கு வெகு நேரத்தின் முன் வந்து, பாடசாலை முடிவடைந்து வெகு நேரத்தின் பின் வீடு செல்லும் வழக்கமுடையவர். கடமை செய்தே உரிமைகளைப் பெறவேண்டுமென்ற கருத்துடையவர். இதனைக் கல்லூரியின் சகல மட்டங்களிலும் வலியுறுத்தி வந்தார். பிரச்சினைகளை நடுநிலையில் நின்று அணுகி நிர்வாகம் நிலை தளம்பாமலிருக்கத் தாமும் ஒரு பங்காளனாகப் பணி புரிந்தார்.

இந்த வகையில் இவரின் சேவையை எல்லோரும் நன்றியுணர்வுடன் என்றும் நினைவு கூருவர்; திருமாலின் திருவடிகளையே அனுதினமும் நினைந்துருகும் இவர் அப் பெருமானின் அருளால் சகல செல்வங்களும் பெற்று வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நா. க. சண்முகநாதபிள்ளை
அதிபர்.

## ஐயா நீர் உயர்ந்து வாழி

மத்தியத்தின் மதிப்பார்ந்த பெருமையெல்லாம்
மனம் கொண்டு பதினான்கு வருடம் நல்ல
சித்திபெற எங்களுக்குக் கல்வியூட்டிச்
சிரத்தையொடு நல்லொழுக்கம் பேணவைத்துப்
பற்றுடனே விளையாட்டு மற்றும் நல்ல
பயிற்சிகளைப் பெறுவதற்கு வழிகள் செய்து
உத்தமனாய் உபஅதிபராகி நின்று
ஓய்வு பெற்றீர் ஐயாநீர் உயர்ந்துவாழி!

மாணவ முதல்வர்களும்,
மாணவர்களும்.

## ஆசிரியருக்கு ஒரு முன்னோடி

எங்கள் மதிப்புக்குரிய ஐயாத்துரை அவர்களை எனக்கு வாலிபப் பராயத்திலிருந்தே தெரியும். அவருடைய குணாதிசயங்களால் அவர் ஆசிரிய சமூகத்துக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார். அவர் அநீதிகளை எதிர்த்துக் குரல் கொடுக்கக் கூடிய துணிவு படைத்தவர்.

அவர் குறிப்பாக எமது பாடசாலையில் கடமையாற்றும் துணை ஆளணியாளர்களை மதித்து அவர்களைக் கௌரவிக்கும் தற்போதைய அதிபருக்கு உதவியாகத் நல்லுடைய சேவையை ஆற்றியுள்ளார்.

அவர் தனது பிள்ளைகளை யாழ் மத்திய கல்லூரியிலேய கல்வி கற்பித்தது அவர் எமது பாடசாலையில் கொண்டுள்ள உள்ளார்ந்த பற்றைக்காட்டுகிறது.

இத்தகைய மனப்பான்மை கொண்ட அவரை துணை ஆளணியாளராகிய நாம் என்றும் மறப்பதற்கில்லை.

அவருடைய சேவையைப் பின்பற்றி ஏனையோரும் எதிர்காலத்தில் கல்லூரிக்கு நற்பெயரை தேடித்தர வேண்டும் என்பதே எமது அவா,

செ. வீரசிங்கம்,
யா/மத்தியகல்லூரி
துணை ஆளயாளர்கள்

## ஆசிரியராகவே பிறந்தவர்

''ஆசிரியர்கள் ஆசிரியர்களாகப் பிறப்பவர்கள்'' என்பது கல்வியிலாளர் கருத்து. அன்றேல் நல்லாசிரியர் பண்பைத் தம்மிடம் வளர்ப்பவர்களாதல் வேண்டும் என்பது தெளிவு. இவ்வழியில் ஆசிரியர் திரு. வி. ஐயாத்துரை அவர்களது ஆசிரியப் பணியை நோக்கின் அவர் ஓர் ஆசிரியராகவே பிறந்தார் என்பது துணிபு.

ஆசிரியர் திரு. வி. ஐயாத்துரை அவர்கள் 18-9-1961 இல் தனது பணியை கொ/திகாரிய முஸ்லிம் ஆண்கள் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து 12-11-1993இல் யாழ். மத்திய கல்லூரியில் தனது பணியில் இருந்து ஓய்வுபெறுகிறார். அவர் அக்கால இடைவெளியான முப்பத்திரண்டு வருடங்களுக்கு மேலான நிலையில் எல்லாமாக எட்டுப் பாடசாலைகளில் பணியாற்றியுள்ளார். குறிப்பாகத் தனது சேவைக்காலத்துள் அதிக காலப்பரப்பை யாழ். மத்திய கல்லூரியில் ஊன்றியுள்ளார்.

ஓர் ஆசிரியனுக்கு வெறுமனே பாடசாலை வருவதும், கற்பித்தல் கற்கை நிலையுடன் வெளியேறுவதும் அழகையோ உரிய கௌரவத்தையோ கொடுப்பதில்லை.

ஆசிரியர் அவர்கள் அக்காலத்துள் யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியர் மன்றத் தலைவராகவும், விளையாட்டுத் துறைப் பொறுப்பாளராகவும், பாடசாலை அபிவிருத்தி குழுப் பொறுப்பாளராகவும் பணியாற்றி அனைத்துக்கும் மேலாகக் கல்லூரியின் துணை அதிபராகவும் பணியாற்றித் தக்கனென ஒரு நன் முத்திரையைப் பதித்துள்ளார்.

அவர்கள் பதித்த நன்முத்திரையின் இலக்கணமாய் என்றும் இன்புற்றிருக்க எம் இதயம் கனிந்து வாழ்த்துகிறோம்.

சி. தனபாலன்,
அதிபர்,
யாழ். பரியோவான் கல்லூரி.

## அடக்கம்பணிவு அவரின் அணிகலன்கள்

நல்லதொரு நண்பன்—
ஆற்றல் மிகுந்த ஆசான்—
மத்திய கல்லூரியின் விளையாட்டுத்துறை முதல்வர்—
மங்காத புகழ்பெற்ற மத்திய தீபத்தின் பிரதி அதிபர்—
எல்லாவற்றிற்கும் மேலாக அன்பும் பண்பும் மிகுந்த மனிதன்—

அவரா இளைப்பாறுகின்றார்?

நம்பமுடியவில்லை, காலச் சக்கரம் வெகு வேகமாகத்தான் சுழல்கின்றது. 1961 ஆம் ஆண்டிலே ஆசிரியப் பணியில் தாங்கள் சேர்ந்தது நினைவிற்கு வருகின்றது. தாங்கள் வெள்ளிவிழாக் கண்டு ஏழு ஆண்டுகள் ஓடிவிட்டன. யாழ் மத்திய கல்லூரியிலே பதினான்கு ஆண்டுகள் பறந்தோடிவிட்டன.

என் இனிய நண்பனே! உமது இளமைக்காலத் துடிப்பும் திறமையும் என் மனக் கண் முன்னே தோன்றுகின்றது. உமது புன்சிரிப்பால் எதையுமே வென்றுவிடும் திறமை பளிச்சிடுகின்றது. அடக்கமும் பணிவும் உமது அணிகலன்கள் ஆயினும் சிறுமை கண்டு பொங்கி எழும் உமது வன்மையும் மறக்க முடியாத உமது பண்பொன்றாகும். கற்பித்தல் உமக்கு கைவந்த கலை கற்பதில் கரைகாணாத இன்பம் காண்பவர் நீர்!

எமது வரலாற்றிலே யாழ். மத்தியகல்லூரியின் பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டவை. பீற்றர் பர்சிவல் பாதிரியாரும், ஆறுமுகநாவலரும் கற்பித்த கல்விக் களம் மத்திய கல்லூரி. அந்த வளமான கல்லூரியிலே பதினான்கு ஆண்டுகள் அரும் பணியாற்றியவர். விளையாட்டுத் துறையிலும், கல்வி நிர்வாகத்திலும் சபாலிங்கம் பெற்ற பெருமையில் மத்திய கல்லூரிக்கு முக்கியபங்குண்டு. ஐயாத்துரை அவர்களின் அரவணைப்பிலே மத்தியகல்லூரியின் விளையாட்டுத் துறை வீறுநடை போட்டது. கல்லூரி நிர்வாகத்துக்கு உறுதுணையாக அமைந்தார் ஐயாத்துரை. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் என்று கல்லூரியின் முழுச்சமூகமும் அவரை நன்கறிந்திருந்தது. அவர் அவர்களை நேசித்தார். அவர்கள் அவரை நேசித்தனர். இதனால் கல்லூரியின் வளர்ச்சி மேலும் வலுவடைந்தது.

தங்களது சேவை தொடர வேண்டும், அதனால் எமது தமிழ்ச் சமூகம் பயனடைய வேண்டும்.

மணிவிழாக்காணும் ஐயாத்துரை அவர்களை எல்லாக் கல்லூரிகளின் சார்பிலும் விளையாட்டுலகின் சார்பிலும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சி. மகேந்திரன்
அதிபர்
கொக்குவில் இந்துக்கல்லூரி

★

## சித்தம் மகிழ்ந்து சிறப்புடன் வாழ்க!

ஐயாத் துரையெனும் ஆசான் தன்கடன்
பொய்யா தென்றும் கல்வியைப் புகட்டிப்,
பலபல பதவிகள் வகுத்து அதன்மேல்
நலமுறப் பிரதி அதிபராய் ''மத்தியம்''
கலகலப் புறவே காரியம் செய்தோன்
மலர்வுற மாணவர் மாண்பை வளர்த்தோன்
''நற்பணி செய்தோர் நாளும் உயருவர்
பொற்புறு செல்வம் பலவும் எய்துவர்''
இத்தகு பாங்கில் இவர்நலம் பெற்று
சித்தம் மகிழ்ந்து சிறப்புடன் வாழ்க!

ஆசிரியர் வட்டம்;
யாழ். மத்திய கல்லூரி.


G. A. Q. 94/95

(பேராதனைப் பல்கலைக்கழகம்)

★ மேற்கூறப்பட்ட பாடநெறிக்கு A/L 3இல் பாடங்கள் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ இதற்கான பல்கலைக்கழக பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
★ விண்ணப்பப்படிவங்களையும் விபரத்தையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.
★ இதற்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 14 - 11 - 1993
11 மணி

விபரங்களுக்கு:
S. அருள் நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(சி-6542)



வடமாகாண
புற்றுநோய்த் தடுப்புச் சங்கம்

12 — 11 — 1993, 14 — 11 — 1993 திகதிகளில் நடைபெறவிருந்த '' முடிவில் ஓர் ஆரம்பம்'' நாடகம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர்,
வடமாகாண
புற்றுநோய்த் தடுப்புச் சங்கம்.

(28069)



யாழ். இந்து அன்னை
உதிரம் வடிக்கிறாள்
நேற்றைய சமரில் வீரமரணமடைந்த
கடற்புலி பா. பாலசொரூபன்
அவர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்
இந்து நண்பர்கள்

(28018)


## புலிகளின் அதிரடியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாண்டனர். இறந்தவர்களின் எண்ணிக்கை 250 க்கும் அதிகமானதாகும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தனிப்பட்ட முறையில் கூறியதாக ஆஸ்திரேலிய வானொலிநேற்றிரவு தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத நிலையில் படையினர் இராணுவ முகாம்கள் கடற்படைத் தளம் ஆகியவற்றைக் கைவிட்டுவிட்டுத் தப்பி ஓடினர்.

அவர்களில் சுமார் 100 பேரை விடுதலைப் புலிகள் சிறு நகரம் ஒன்றில் சுற்றி வளைத்து வைத்திருப்பதாக நேற்றுப் பிற்பகல் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இவர்களைவிட மேலும் பல படையினர் புலிகளிடம் உயிருடன் அகப்பட்டிருப்பதாகவும் அறியவந்தது.

இதேவேளை பூநகரிப் பகுதியில் உள்ள நான்காவது இராணுவ முகாமையும் பிடிப்பதற்காக படையினருக்கு எதிராகப் புலிகள் கடும் தாக்குதலைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்ததாக நேற்று மாலை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இராணுவ முகாம்கள், கடற்படைத் தளம் என்பன தம்மிடம் வீழ்ந்ததைத் தொடர்ந்து,-

இரண்டு யுத்த கவச டாங்கிகள், ஐந்து நீருந்து விசைப்படகுகள், பவள் போன்ற இராணுவ வாகனங்கள், 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கிகள், ஏ. கே. எல். எம். ஜி. போன்ற பெருந்தொகையான ஆயுதங்கள் என்பனவற்றைப் புலிகள் கைப்பற்றினர்.

நாகதேவன்துறையில் நின்றிருந்து விசைப்படகு ஒன்று கடற்கரும்புலித் தாக்குதலில் அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தாக்குதலின் போது கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்களும், விமானத் தாக்குதல்களும் கடுமையாக மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் மத்தியிலேயே துணிகரமான அதிவேக அதிரடித் தாக்குதல்களை பல முனைகளிலும் நடத்தி பூநகரிப் படைத் தளங்கள் இருந்த பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். (அ-3-5-9-16-17)


NEW MASTER INSTITUTE
B.M.C. LANE,
JAFFNA.

முக்கிய அறிவித்தல்

இம்மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் வகுப்புகள் நடைபெறாமையால் 13 ஆம் திகதி சனிக்கிழமை வகுப்புக்கள் வழமைபோல் 2-00 மணி வரை நடைபெறும்.

- நிர்வாகி.

(சி-6538)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்
# உயர்திரு பொ. சிவகுருநாதன் அவர்களின்
## வரம்பிலா வல்லமையை விதந்து வாழ்த்துவோம்

12 - 11 - 1992

# வடக்கின் கல்வி வளர்ச்சிக்கு
# அயராது உழைத்த செயல் வீரர்

புத்தூர் கொயிலார் மரபில் வயித்திலிங்கம் பொன்னம்பலம் (மாளிகைப் பொன்னம்பலம்) அவர்களுக்கும் தெய்வானைப்பிள்ளை அவர்களுக்கும் 05 – 01 – 1934இல் புத்திரனாக திரு. சிவகுருநாதன் அவர்கள் பிறந்தார். இவர் தமது கல்வியைப் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் தொடர்ந்து சிரேஷ்ட தராதரப்பத்திர வகுப்பு வரையில் (H.S.C.) பயின்றார். அப்பாடசாலையின் அதிபர் அமரர் குமார

## வேலணைக் கோட்டத்தில் அவரது சேவை சிறந்தோங்கியது

சாமியின் காலத்தை பொற்காலம் எனப் பலரும் கூறுவர். அவர் காலத்திலேயே மாணவனாகவும், ஆசிரியனாகவும் இருந்த பெருமை இவரைச் சாரும்.

இவர் மாணவனாக இருக்கும் பொழுது கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகளை யாழ். மாவட்டத்திலும், அகில இலங்கை ரீதியிலும், மெய்வல்லுநர் நிகழ்வுகளிலும் பெற்று பல வெற்றிக்கிண்ணங்கள், கேடயங்களைப் பெற்றார்.

1954ஆம் ஆண்டு இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்பப் பயிலுநராகப் பயிற்சி பெற்று இடையில் நிறுத்தி, உயர் படிப்புப் பெறவேண்டும் என்ற ஆசையினால் 1955ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக கல்லூரியான பச்சையப்பன் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டு 1959ஆம் ஆண்டு இரசாயனம், பௌதீகம், கணிதம் ஆகிய பாடங்களில் விஞ்ஞான பட்டதாரி ஆகினார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் சென்னை பல்கலைக்கழக விளையாட்டுக் குழுவில் அங்கம் வகித்து, பல சாதனைகள் நிலைநாட்டி விருது பெற்றதுடன், கல்லூரி விளையாட்டுக் குழுவுக்கு தொடர்ந்து தலைமை தாங்கி பல பரிசில்களையும் தட்டிக்கொண்டார்.

### ஆசிரியராக...

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் 11 – 05 – 1959இல் விஞ்ஞான ஆசிரியராக நியமனம் பெற்றார். கல்லூரியில் ஆசிரியராக இருந்த பொழுது ஒரு சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்த அதிபர் அமரர் குமாரசுவாமியுடன் அவரது தலைமையில் கடமைசெய்ய வாய்ப்பு ஏற்பட்டது. கல்லூரியில் மெய்வல்லுநருக்கு பயிற்சியளித்தல்— நிர்வாகத்தில் சிறந்த ஒழுங்குகளை கடைப்பிடிக்க பயிற்சி பெறுதல்—முறையான நேரசூசி அமைத்தல் சகல பொறுப்புகளைப் பற்றியும் சரியான முறையில் தெரிந்து கொள்ளல் ஆகியவற்றைப் பற்றி சிறந்த அனுபவங்களைப் பெற்றார்.

இரண்டாம்தர விசேட பதவியுடன் 1969-10-15லிருந்து



பொ. சிவகுருநாதன்

1971-12-31 வரை இரத்தினபுரி புனித அலோசியஸ் கல்லூரியில் தமிழ்ப் பிரிவின் தலைவராக சேவையாற்றியுள்ளார். இவர் காலத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் சித்தியெய்தி தொழில் வாய்ப்பைப் பெற வசதியாக இருந்தது.

### அதிபராக

1972-01-01 லிருந்து 1976-02-29 வரை வவுனியா மகாவித்தியாலய அதிபராக கடமையாற்றினார். வவுனியா மகா வித்தியாலயம் புதுப் பொலிவும், வளர்ச்சியும் பெற்ற காலம் இவருடைய பதவிக் காலத்திலேயாகும்.

1972இல் கல்விப் பொது தராதர உயர்தர விஞ்ஞான வகுப்பு அங்கு ஆரம்பிக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு சித்திரை கல்விப் பொதுதராதர உயர்தர பரீட்சைக்கு முதல் முதல் தோற்றி விஞ்ஞான பீடத்திற்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். 1975 — 1976ஆம் ஆண்டு மருத்துவம், பொறியியல், விவசாயம், விஞ்ஞான பீடங்களுக்கு பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவானார்கள்.

### கல்வி அதிகாரியாக

1975-04-07ஆம் திகதி தொடக்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் பதவி உயர்வு கிடைத்தது. பதவி உயர்வின் பின் 01-03-1976 தொடங்கி 06-11-1977 வரை அனுராதபுரம் கல்வித் திணைக்களத்தில் விஞ்ஞான கல்வி அதிகாரியாக கடமை புரிந்து, தமிழ் மொழிமூலப் பாடசாலைகளின் விஞ்ஞானக் கல்வியின் தரத்தை உயர்த்த காரணமாக இருந்தார். அனுராதபுரம் விவேகானந்தக் கல்லூரியின் விஞ்ஞானப் பிரிவை திறம்பட புனரமைத்து வழி நடத்தினார்.

1977-11-07 லிருந்து 1989-05-09 வரை மன்னார் கல்வித் திணைக்களத்தில் கடமை புரிந்தார். இவர் அங்கு கடமை புரிந்த காலத்தில் மாந்தை கல்வி வட்டாரத்தின் கல்வி வளர்ச்சி சிறப்பாக இருந்தது. விஞ்ஞான வள நிலையம், ஆரம்பித்ததின் மூலமும், விஞ்ஞான கண்காட்சியை நடத்தியதன் மூலமும் பலரினதும் பாராட்டைப் பெற்றார்.

### பிரதிக் கல்விப் பணிப்பாளராக

1988-12-15 தொடக்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் IIக்கு பதவி உயர்வு பெற்றார். 1989-05-11 தொடக்கம் 1990-05-14 வரை யாழ். மருதனார்மடம் கல்விக்கோட்டத்தின் பொது நிர்வாகத்திற்கு பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், 1989-05-15 தொடக்கம் 1992-12-31 வரை தென்மாரட்சிக் கல்விக் கோட்டத்திற்கு பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

இவரது முயற்சியினால் 4-6-90 தொடக்கம் புதிய கல்விக் கோட்டம் உருவாகி சாவகச்சேரியில் கோட்டக் கல்வி அலுவலகம் அமைக்கப்பட்டது. இவர் சாவகச்சேரி பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்திலேயே தென்மராட்சியில் ஒரே ஒரு பெண் பாடசாலையான சாவகச்சேரி மகளிர் ம. வித்தியாலயத்தில் உயர்தர விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. சாவகச்சேரி இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையாகியது.

1-1-93 தொடக்கம் வேலணை கோட்டக்கல்வி அதிகாரியாக கடமை மேற்கொண்டார். வேலணை கோட்டக் காரியாலயம், தற்காலிகமாக யாழ்ப்பாணத்தில் அமைந்து செயற்படும் வேளையில் அக்கோட்ட ஆசிரியர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பணிபுரிந்த முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் அவர்கள் மாற்றலாகிச் சென்றும் அக்கோட்டம் எந்தவிதத்திலும் தொய்யாது, சிறப்பாக நடைபெறுவதற்குக் காரணமாக இருந்தார். இவர் இங்கு கடமையாற்றிய காலத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள், திணைக்கள ஊழியர்களுடன் மிகவும் அந்நியோன்ய உறவு வைத்து மிகவும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொண்டார்.

திரு. சிவகுருநாதன் ஆசிரியராக, அதிபராக, கல்வி அதிகாரியாக, கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக தமிழரின் கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்து அரும்பணி ஆற்றியுள்ளார்.

மன்னார், வவுனியா தென்மராட்சிக் கோட்டம் முதல் வேலணைக் கோட்டம் வரை அவர் சிறப்பான கல்விப் பணியைப் புரிந்துள்ளார். அவருடைய சிறந்த கல்விச் சேவையை இறுதியாகப் பெறும் பாக்கியம் வேலணைக் கோட்டத்துக்குக் கிடைத்தது. வேலணைக் கோட்டம் இதனால் திறம்பட இயங்கியது.

மக்கள் சேவையாளனும் நேர்மையான ஊழியனுமான அவர் வேலணைக் கோட்டத்திலிருந்து இளைப்பாறினும் மேலும் மக்கள் பணி புரியவும் அவரது எதிர்கால வாழ்வு சிறப்பாக அமையவும் வாழ்த்துகிறோம்.

★

## சிவகுருநாத வாழ்க!

வேலணைக் கோட்டத் தோடு
வித்தகா இணைந்து நின்று
சோலையாய் கோட்டம் மாற
சுறுசுறுப் பாக நின்றாய்
காலையின் ஞாயிறாகி
கதிர்தனைப் பரப்பி நின்றாய்
சீலமே உருவாய்க் கொண்ட
சிவகுரு நாத வாழ்க!

நெடியஉன் உருவம் கண்டால்
நீங்கிடும் பகைக ளெல்லாம்
துணிவுடன் கரும மாற்றும்
தூய நல்லுள்ளம் கொண்டோய்
கனிவுடன் பேசி நிற்பாய்
கடுகடுப் பாயும் நின்றாய்
மனதிலே என்றும் நிற்பாய்
நீடுநாள் வாழி ஐயா!

நான் உன்னை மறக்கமாட்டேன்
நற்சிவகுரு நாத ஐயா
வான்மழை போல நீயும்
வண்ணமாய் உதவி நின்றாய்
தேன்என இங்கு நின்று
தித்திப்பு ஊட்டி நின்றாய்
வான்இடை மதியம் போன்று
வளர்ந்தோங்கி வாழ்க என்றும்!

மலர் வெளியீடும் அமைப்பும்:
வேலணைக் கல்விக் கோட்ட
அலுவலகத்தினர், அதிபர்கள்,
ஆசிரியர்கள்.

## எம்மை அரவணைத்து ஊக்கமளித்த ஆசான்

வேலணைக் கல்விக் கோட்டத்தை எல்லா வகையிலும் மிடுக்குடன் நடை போட வைத்த முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அந்த இடத்தை நிரப்பி எவ்வகையிலும் குறைவு படாது எமது கோட்டத்தை வழிப்படுத்தி முத்திரை பதித்த பி. க. பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் அவர்கள் தமது அன்பு, பண்பு, அரவணைப்பு, வழிகாட்டல் ஆகியவற்றின் மூலம் எமக்கு ஊக்கமளித்து முன்னுதாரணமாக நடந்தார். இவர் மற்றையோரின் மன உணர்வுகளைப் புரிந்து எமது கோட்டத்தின் கல்வி நிலைமைகளை மனங் கொண்டு எமது கோட்டத்தின் பல்வகை உயர்வுக்காகத் தம்மால் இயன்ற அத்தனையையும் ஆற்றி ஓய்வு பெறுகிறார். இவரை உளமார வாழ்த்துவதில் பெருமையடைகிறோம்.

## சேவையின் போது கிடைத்த மெச்சுரைகள்:

வவுனியா மகாவித்தியாலய அதிபராக திரு.பொ, சிவகுருநாதன் கடமையாற்றிய பொழுது நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது வடமாநிலக்கல்வி அதிபதி தி. மாணிக்கவாசகர் பாராட்டு:

''கல்லூரியின் கட்டுப்பாடு,ஒழுக்கம் ஆகியவை எல்லோருடைய ஒத்துழைப்பையும். செல்வாக்கையும் பெற்றுள்ளாரென்பதற்கு இவ்விழா சான்று பகருகின்றது. விழா ஒழுங்குகள் சிறப்பாகவும், உன்னதமாகவும் இருந்தமையால் அவரது நிருவாகத் திறமையை பெரிதும் பாராட்டுகிறேன்,

மாந்தை வட்டாரப் பாடசாலைகளின் கல்விக் கண்காட்சி 1983 பங்குனி 23, 24ஆம் திகதிகளில் மன்/அடம்பன் ம.ம. வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன் நினைவு மலரில் மன்னார் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் செல்வி பி. ஆறுமுகம் அவர்களின் பாராட்டு;

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ, சிவகுருநாதன் அவர்களின் தலைமைத்துவமும், விடாமுயற்சியும், ஊக்குவிப்பும் இக்கண்காட்சி சிறப்பாக அமைய முக்கிய காரணிகளாக இருந்தன என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

26 - 02 – 1976 இல் வவுனியா ம. வித்தியாலய அதிபராகக் கடமை புரிந்து வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லுகையில் ஆசிரியர், மாணவர் வழங்கிய பிரிவுபசார வாழ்த்துமடல்:

''துயர்களைக் களைந்தாய் சிங்கவேறென மிளிர்ந்தாய்
சற்றும் பயமில்லா தாண்மையோடு பணி பல-
புரிந்தாய் ஐயா''

தொடர்ந்து

அதிபனென்றுயர்ந்தாய் ஆய்வுகூடம்-
நன்கமைத்தாய் கல்வி
நிதியம் நன்களித்தாய் நின்னால் நிலையமும் உயர்ந்து
வன்னிப் பகுதியினில் நாற்பதின்மர்-
பயிற்றிடுங் கூடமாக
மதிவலார் போற்றும் வண்ணம் மாண்புற-
மிளிர்ந்ததன்றே.

Vavuniya Agro Exhibition 27/28 - 07 - 1974 S. Sivagnanam, Government Agent, Vavuniya District;

"Mr. Sivagurunathan spared no pains to make the occasion a successful one and was also of considerable assistance to the Exhibition Secretariat. I wish to place on record my appreciation of his services.

**The Late Prime Minister Hon'ble S. W. R. D. Bandaranayake Commemoration Day – Shramadana September – 1973**

I am appreciative of your close relationship with the parents, Teachers and Students in making them understand the Significance of shramadana activities at this juncture when the Country is Confronted with the food Crisis.

The Pachaiyappa's College Magazine, March 1959 Page 42:

Sivagurunathan our athlete from Ceylon, who did his Intermediate Course in Pachaiyappa's College at Kanchepuram has joined our College in Madras. We are happy to note that he collected on the whole the maximum number of prizes from our Institutions.

---

ஊனமுற்றோர் புனர்வாழ்வு நிதிக்காக
யாழ். லயன்ஸ் கழகத்தால் நடத்தப்பட்ட

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

இலக்கங்கள் பின்வருமாறு:

1ஆம் பரிசு — **3212**
2ஆம் பரிசு — **2324**
3ஆம் பரிசு — **1698**

ஆறுதல் பரிசுகள்:

| | | |
|---|---|---|
| 1. 6675 | 2. 1456 | 3. 0680 |
| 4. 9393 | 5. 5888 | 6. 5807 |

அதிர்ஷ்டசாலிகள் 18-11-1993 (வியாழக்கிழமைக்குள்) பரணி பார்மசி (மருந்துச்சாலை), 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

● குறிப்பு:
இவ்வறிவித்தல் உரிமை கோராத அதிர்ஷ்டசாலிகளின் நன்மை கருதி பிரசுரிக்கப்படுகின்றது.

[27998]

---

சுதுமலை

## அருள்மிகு விசாலாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம்

## இலட்சார்ச்சனை பூர்த்தியும் யமசங்கார விழாவும்

இடம்: சுதுமலை சிவன் கோயில்

காலம்: இன்று **12 – 11 – 1993** ஐப்பசி- **27** ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு

நிகழ்ச்சி: பொம்மையாட்டம், கரகாட்டம் விஷேச மேளக் கச்சேரியும் இடம்பெறும்.

குறிப்பு: பல வருடங்களின் பின் புதுப் பொலிவுடன் விழா சிறப்பாக நடைபெறும்.

வாகன அமைப்பு: திருநெல்வேலி
ஆறுமுகம் கந்தசாமி
ஆசாரியார் அவர்கள்.

அனைவரும் வந்து சிறப்பித்து எம்பெருமானின் அருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

க. இராசாக்குருக்கள்,
ஆலய நிர்வாகி.

(28007)

---

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலிகள்

## திருமதி சரஸ்வதி கணபதிப்பிள்ளை


நிறைந்த ஆலயப்பற்றுமிக்க திருமதி சரஸ்வதி கணபதிப்பிள்ளையவர்கள் 13-10-93 சிவப்பேறு அடைந்து விட்டார். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக பிராத்திக்கின்றோம்.

மாதர்சங்கம்.
காளிகோவில் உடுவில்.

(28005)

---

## மூன்றாண்டு உம் நினைவில்



மண்ணில்: 15 — 04 — 1925

விண்ணில்: 13 — 11 — 1990

## அமரர் A. S. பொன்ராஜா

மூன்றாண்டு மூன்றெழுத்தில் மூழ்கினாலும்-உம்
நினைவு எம்மைவிட்டு நீங்காதையா! உம்
முகம் எமைவிட்டு போகாதையா! - ஆனால்
மூன்றாண்டு உம் நினைவில் மூழ்குதைய்யா!
ராஜநடைபோடும் உமது கால்கள்தான் எங்கே!
வெள்ளை ஆடையிலே தோன்றும் மேனிதான்
எங்கே!
வாழ்ந்தது போதுமென்று ஓய்ந்துதான் போனீரோ!
ஒருவருமின்றி எமை ஓலமிடத்தான் வைத்தீரோ!
நான்காம் ஆண்டும் உம் நினைவிலேயே......

இவரது ஆன்ம சாந்திக்காக நாளை (13-11-1993) காலை 6-00 மணிக்கு ஆச்சிரமத்தில் இருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவர் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 397 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(27969)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பொமனேரியன் நாய்க்குட்டிகள் (மண்ணிறம் கறுப்பு கலந்தது, பூச்சி நீக்கியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: E. அன்ரனி, 392, பிரதான வீதி, (பஸ்தியன் சந்தி) யாழ்ப்பாணம். (27989)

நஷனல் பனசோனிக் Two in one டெக்செற், ரேடியோவும், 2 Box மொடல் SG 3300 B பயனியர் கார், ரேடியோ, 2 ஸ்பீக்கர் அன்ரனா பாவிக்காததும், எலெக்றிக் Regulator, எமர்ஜன்சி லைற் 2 விற்பனைக்குண்டு. சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, ஈச்ச மோட்டை, யாழ்ப்பாணம். (28002)

வெள்ளடியன் சேவல்கள், பேடுகள் விற்பனைக்குண்டு. வீ. தவறட்ணம், அசோகன் வீதி, மட்டுவில் மத்தி, சாவகச்சேரி. (6592)

## O/L வினா - விடை

உயர் கல்விச்சேவை நிலைய கடந்தகால வினாவிடையும், அப்பியாசக் கொப்பிகளும் மலிவு விலையில் விற்பனையாகின்றன. அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி-6533)

## இலவச திருமண சேவை

29 வயது, சதயம், செவ்வாயற்ற, ஜேர்மனியில் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (27954)

## அனுமதிப் பரீட்சை

பிரபல பாடசாலை மாதிரி அனுமதிப் பரீட்சை வினாத்தாள் 14 - 11 - 93 ஞாயிறு மு.ப. 8 மணிக்கு வெளியிடப்படும். மேற்படி பரீட்சைக்கான மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27996)

## ஆட்டுக்கடாய் விற்பனை

பெரிய ஆட்டுக்கடாய் விற்பனைக்குண்டு. தொடர்பு, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27993)

## தவறிவிட்டது

யாழ். 3-ஆம் குறுக்கு வீதிக்கும் கன்னியர் மடம் பாடசாலைக்கும் இடையிலான பிரதான வீதியில் மூக்குக் கண்ணாடி ஒன்று 8-11-93 திங்கள் இரவு தவறிவிட்டது. எடுத்தவர்கள் ஜே. கிதபொன் கலன், 98, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (6539)

## ஆங்கிலம்

ஆரம்ப ஆங்கிலத்தில் இருந்து (English) உயர் ஆங்கிலம் வரை கற்பிக்கப்படுகிறது. V. N. Kandasamy (Consultant English Studies) 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்கு அண்மையில்), கொக்குவில். (6593)

# முல்லைத்தீவில் குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற்செய்கைக்கான நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கும் நோக்குடன் சிறு குளங்களை சிரமதான அடிப்படையில் புனரமைக்கும் பணியினை முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிராமிய உற்பத்திக் குழுக்களுடனும் மக்களுடனும் இணைந்து மேற்கொண்டுள்ளது.

நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, முல்லைப் பிரதேசங்களிலே இதுவரை சுமார் பன்னிரண்டு சிறு குளங்கள் சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்பட்டுள்ளன. (இ)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை.

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. நுண்கலைகள்/தமிழ்/பொருளியல் / வர்த்தக/வியாபார நிர்வாகப் பேராசிரியர்.
2. கல்வியில்/தமிழில்/மொழியியலில்/வர்த்தக முகாமைத்துவப் படிப்புக்களில்/சித்த மருத்துவத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் I /சிரேட்ட விரிவுரையாளர் தரம் II/விரிவுரையாளர் (தகுதிகாண்)/உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
3. மெய்யியலில்/நாடகமும் அரங்குக்கலைகளில் தற்காலிக உதவி விரிவுரையாளர்.
4. நுண்கலைகளில் தற்காலிக கட்டுரை ஆசிரியர்.

● தயவு செய்து குறித்துக் கொள்க:

கல்வியில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் I/ சிரேட்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் (தகுதிகாண்)/உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்).

● பின்வருவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

(அ) பட்டமட்டத்தில் வரலாற்றை ஒரு பாடமாகக் கொண்டுள்ளோருக்கும், பட்டப்பின் மட்டத்தில் கல்வித் தத்துவத்தை கற்பிக்கக் கூடியவர்களாகவும், பட்டப்பின் மட்டத்தில் இந்து சமயத்தைக் கற்பிக்கக் கூடியவர்களுக்கும்.

(ஆ) பட்டத்திற்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டிருப்பவர்களுக்கும்.

(இ) ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் பற்றி கல்வியில் பட்டப்பின் டிப்ளோமாவை கொண்டிருப்போர்/அல்லது கல்வியில் பட்டப்பின் டிப்ளோமாவுடன் முறையியலுக்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டுள்ளோருக்கும்.

வர்த்தக முகாமைத்துவப் படிப்புக்களில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் I/சிரேட்ட விரிவுரையாளர் தரம்II/விரிவுரையாளர் (தகுதிகாண்) / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்).

● பின்வருவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்!

(அ) வியாபாரப் பொருளியல்

(ஆ) கணிதம், கணனியியலுடன் மிகவும் விரும்பத்தக்கது.

(இ) வங்கியியலும், காப்புறுதியும்.

இவற்றுடன் தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த அபேட்சகர்களும் கவனிக்கப்படுவர்.

**சம்பள அளவுத்திட்டம்:**

பேராசிரியர்:
ரூபா 16,100 — 6 X 400 — 18,500/- மாதமொன்றிற்கு.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I:
ரூபா 12,725 — 8 X 325 — 15,325/- மாதமொன்றிற்கு

சிரேட்ட விரிவுரையாளர் தரம் II;
ரூபா 10,650 — 5 X 325 — 12,275/- மாதமொன்றிற்கு

விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 6,050 — 10 X 250 — 8,550/- மாதமொன்றிற்கு.

உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்):
ரூபா 4,585/– (நிலையானது) மாதமொன்றிற்கு 1993 - 12 - 31 வரை

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா 5,270/-(நிலையானது) மாதமொன்றிற்கு 1994-01-01 தொடக்கம்.

தற்காலிகக் கட்டுரை ஆசிரியர்;
ரூபா 3,635/- (நிலையானது) மாதமொன்றிற்கு 1993 - 12 - 31 வரை
ரூபா 4,420/- (நிலையானது) மாதமொன்றிற்கு 1994 - 01 - 01 தொடக்கம்

துறைத்தலைவரினதும் பீடத் தலைவரினதும் ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளருக்கு (தகுதிகாண்), விரிவுரையாளர் (தகுதிகாண்) என பதவிப் பெயர் அளிக்க முடியும் என்பதுடன் அவரைத் துணைவேந்தர் ரூபா 6,050— 10 X 250 — 8,550/- மாதமொன்றுக்கு, சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கலாம்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) பட்டதாரிகள் நிலையான சம்பளத்தில் ஓராண்டுக்கு உதவி விரிவுரையாளராகப் பணிபுரிய வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டு விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். இச் சம்பள அளவுத்திட்டம் 1994-01-01ஆம் திகதியிலிருந்து செயற்படுத்தப்படும்.

தற்காலிகக் கட்டுரையாளர் பதவிக்கு வெளியிடப்பட வேண்டிய பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டோர் அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை 1993-12-31 வரை 3,660/– (நிலையான) மாதாந்த சம்பளத்தில் வைக்கப்படுவதுடன் 1994 - 01 - 01 தொடக்கம் ரூபா 4,100/– (நிலையான) மாதாந்தச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.

1993 ஆகஸ்ட் 3ஆம் திகதிய 579ஆம் இலக்க ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு ஏற்ப நிரந்தரப் பதவிகளுக்கான சம்பள அளவுத் திட்டங்கள் 1994 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து முழுமையாகச் செயற்படும். இத்துடன் தற்காலிகப் பதவியினர்க்கும், நிரந்தரப் பதவியினர்க்கும் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப் படியாக 1994 டிசெம்பர் 31-ஆம் திகதி வரை சம்பளத்தின் 25சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக 600/– ரூபா செலுத்தப்படும்,

இத்துடன் ''புத்தகப்படியாக'' ஒவ்வொருவருக்கும் ஓராண்டுக்கு 10,000/– ரூபா காலாண்டுத் தவணைப் பணங்களாக ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் செலுத்தப்படும். 1994-01-01 தொடக்கம் நிரந்தரப் பதவியினர்க்குச் செலுத்தப்பட வேண்டிய படி ஆண்டுக்கு 10,000/- ரூபாவுடன் வருடாந்த நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றப்படியினதும் 10 சதவீதமுமாகும்.

பட்டதாரி ஒருவர் அல்லது இறுதிப் பட்டத் தேர்வின் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் ஒருவர், தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிக்கும் தற்காலிகக் கட்டுரை ஆசிரியர் பதவிக்கும் விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராவர்.

**விண்ணப்ப முடிவு திகதி:**

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்/ தற்காலிக கட்டுரையாசிரியர் பதவி — **1993 - 12 - 10**
2. பேராசிரியர் பதவி — **1994 - 01 - 31**
3. இதர பதவிகள் — **1993 - 12 - 10**

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/--ரூபாவை நிதிக்கிளையில் செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப்பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23 X 10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்டு 1/-முத்திரையிடப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவங்களையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

**- பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.
1993.11.05

(சி/6345)

---

# ஓர் அறிவித்தல்

கணேச சனசமூக நிலையம்
உரும்பராய் வடக்கு

மேற்படி நிலையத்தினால் 13 - 11 - 1993 இல் அதிர்ஷ்டம் பார்க்க இருந்த சீட்டிழுப்பு எதிர்பாராத சில காரணங்களினால் நத்தார்ப் பண்டிகை தினமாகிய 25 - 12 - 1993 க்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை எம்மிடம் அதிர்ஷ்ட லாபச் சீட்டு வாங்கியவர்களுக்கு மிகவும் பணிவுடன் அறியத் தருகின்றோம்.

நன்றி:

இங்ஙனம்:
நிர்வாக சபையினர்.

[27985]

---

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## சபாபதி தங்கராசா

பிறப்பு: **01 —03 — 1937**
இறப்பு: **28 — 10 — 1989**
திதி: 12 - 11 - 1993

''நீங்காத நினைவலைகள்
நெஞ்சை முத்தமிட
தாங்காது எம் விழிகள்
தாம் கரைந்து அழுகின்ற
நீங்கள் துயில் கொண்டு
நிறைந்தது நான்கு ஆண்டு
நாங்கள் துயில் கொண்டு
நமதாவி போகும் வரை
தூங்காது உங்கள் நினைவு
துடித்திருக்கும் எங்கள்
இதயம் போல்''

அன்பு மனைவி
திருமதி கமலாதேவி தங்கராசா

சுதுமலை வீதி,
தாவடி.

(சி-6540)

---

# தென்னிந்திய திருச்சபை
## யாழ். பேராயம்
# நம்பிக்கை இல்லம்
## (HOUSE OF HOPE)

மேற்படி இல்லத்திற்கு உடல் ஊனமுற்ற (Physically disabled) ஐந்து (5) வயதிற்கும் பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் குடும்ப விவரத்துடன் திருமதி P, கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயற்திட்டப் பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை.


ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி-6352)

---

# 6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 14 — 12 — 1908



மறைவு: 19 — 05 — 1993

## திருமதி வேதிலிங்கம் அன்னப்பிள்ளை

எங்கள் அன்புத் தெய்வம் திருமதி வே. அன்னப்பிள்ளை அவர்களின் நினைவு அஞ்சலியும், அந்தியேட்டிக் கிரியையும் இன்று (12 - 11 - 1993) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பிரிவால் துயருறும்
வே. தம்பித்துரையும்
குடும்பத்தினரும்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(28012)

---

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முத்தையா நல்லையா

தோற்றம்: **12 — 09 — 1929**
மறைவு: **28 — 10 — 1989**
திதி: 12 — 11 — 1993

ஆண்டுகள் நான்கு சென்றாலும் எங்கள் மனத்தை விட்டு நீங்காது நிலைத்திருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மருமகன், மகள்.

நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[6596]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பூநகரித் தாக்கு புத்தி தருமா?

பூநகரிப் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகள் வியாழன் அதிகாலை நடத்திய மிகப்பெரும் தாக்குதல் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தில் புதிய சாதனை ஒன்றை உருவாக்கி உள்ளது. கடந்த நாற்பத்திரெண்டு மாதங்களாக வடக்கு – கிழக்கில் ஸ்ரீலங்கா படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் யுத்தத்தில் பூநகரித் தாக்குதல் உச்சமானது. திருப்புமுனையானது.

அரசாங்கப் படைகள் என்ற வகையில் அவற்றுக்குள்ள வளங்கள், வாய்ப்புகள், வசதிகள் மிகப் பல. அந்த வளங்கள், வசதிகளை உட்கொண்டு ஸ்ரீலங்கா இராணுவம் இராட்சத வடிவம் பெற்றுள்ளது. கடந்த மூன்று வருடங்களில் மட்டும் முப்பது மடங்கு வளர்ந்துவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஒடுக்கப்படும் சிறுபான்மை இனத்தின் விடுதலைப் படையினர். ஆகையால் ஆயுத பலத்திலும் சரி, ஆளணிப் பலத்திலும் சரி ஸ்ரீலங்கா படைகளுக்குச் சமனாகுவது கஷ்டமே.

விடுதலைப் புலிகள் இந்த இரு வகைகளிலும் தமக்குச் சமனாக வர இயலாதென்பதால் அவர்களை வெல்ல முடியும், அழிக்க முடியும் என்ற தப்பான கணக்கை அரசபடையினர் போட்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் தமது மக்களின் விடுதலைக்காகப் போராடும் விடுதலை வீரர்கள். தாயகமண்ணை மீட்பதற்காக தங்கள் உயிரையும் துறக்கச் சித்தமான இலட்சிய வீரர்கள். வீரமும், விவேகமும், போர்ச்சாதுரியமும், திறமையும் மிக்கவர்கள். ஸ்ரீலங்கா படைகளின் ஆட்பலம், ஆயுத பலம் எல்லாம் புலிகளின் முன்சொன்ன பலங்களால் அடிபட்டுப் போகும் என்பதை படையினரும், அரசும் இன்னும் உணரவில்லை. அதனால் அவர்களுக்கு பூநகரி இழப்புகள், தோல்விகள் தவிர்க்க முடியாதவையே.

கடந்த மூன்றரை வருடங்களிலும் புலிகள் தமது தியாகத்தையும், திறமையையும் நிரூபித்துக் காட்டும் விதத்தில் நடத்திய வெற்றித் தாக்குதல்களின் பின்னரும் புலிகளின் சக்தியை இராணுவத்தினர் குறைத்தே எடை போட்டனர்.

பூநகரித் தாக்குதலுடனாவது புலிகளின் சக்தியை உணர்வார்களா?

கிளாலியையும் மூடுவதற்காக செப்டம்பர் மாத இறுதியில் இராணுவத்தினர் தொடங்கிய யாழ்தேவி நடவடிக்கை தோல்வியுற்றது. இப்போது பூநகரிப் பாதையை மீண்டும் திறக்கக் கூடியதாக புலிகள் வெற்றிச் சாதனையை புரிந்து உள்ளார்கள். பூநகரியைத் திறப்பதற்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மேற்கொண்ட முயற்சியின் போது, விடுதலைப் புலிகளின் சில நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதற்கு அரசு மறுத்தது. ஆனால் இப்போது...?

தாங்கள் பெரும்பான்மையினர் என்பதால் தமிழர்களை அடக்கி ஆளலாம் என்று சிங்களத் தலைவர்கள் நினைக்கிறார்கள். அதேபோல் புலிகள் சிறிய எண்ணிக்கையினர் என்பதால் அவர்களை வெல்லலாம் என்று படையினர் நினைக்கின்றனர். இந்த இரண்டு எண்ணங்களையும், தமிழர்கள் — விடுதலைப் புலிகள் பொய்யாக்குவர் என்பதற்கு பூநகரித் தாக்குதல் மற்றுமொரு நல்ல எடுத்துக்காட்டு.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் மடிந்து வரும் படையினர் எண்ணிக்கை முறைக்கு முறை அதிகரித்து வருகிறது. அதிலிருந்தேனும் விடுதலைப் புலிகளின் சக்தியை, வல்லமையை இராணுவம் புரிந்து கொள்ளுமா? இராணுவ ரீதியாக மேலோங்கி நின்று தமிழர் விரும்பாத தீர்வைத் திணிக்க முடியாது என்பதை அரசு உணருமா? தனது இராணுவத் தீர்வு வழியை மாற்றிக் கொள்ளுமா? இனியாவது அதற்குப் புத்தி வருமா?

# பூநகரி படைத் தளங்கள் மீதான தாக்குதல் குறித்து அரசு மௌனம்

### நான்கு வரி அறிக்கை மட்டுமே வெளியானது

கொழும்பு, நவ. 12

பூநகரி இராணுவ மற்றும் கடற்படைத் தளங்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதல் குறித்து ஸ்ரீலங்கா அரசு மௌனம் சாதித்தது.

புலிகள் நடத்திய பாரிய தாக்குதல் பற்றிய தகவல்கள் கொழும்புக்குக் கிடைத்தவுடன், பாதுகாப்பு அமைச்சு முதலில் நான்கு வரிகள் மட்டும் கொண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் —

''பூநகரிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே கடும் சண்டை தொடர்ந்து இடம்பெறுகின்றது. இரு தரப்பிலும் பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மேலும் விவரங்கள் கிடைத்தவுடன் பத்திரிகை அறிக்கை ஒன்று வெளியிடப்படும்'' — என்று மட்டுமே தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையையே இலங்கை வானொலி தனது நண்பகல் மற்றும் மாலை செய்தி அறிக்கைகளில் செய்தியாகத் தெரிவித்தது.

ஆனால் இரவு செய்தி அறிக்கையில் பூநகரி பற்றி ஒரு வார்த்தை கூட இலங்கை வானொலி தெரிவிக்கவில்லை.

தனது தலைப்புச் செய்திகளில் முதல் செய்தியாக ''இலவசக் கல்வி திட்டத்தை அர்த்தமுள்ளதாக்க அரசு முழு நடவடிக்கையையும் எடுத்து வருகின்றது'' — என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

இதேவேளை — உலகின் ஏனைய பி.பி.ஸி., வொய்ஸ் ஒப் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் பிரபல வானொலிகள் தங்கள் செய்தி அறிக்கைகளில் தலைப்புச் செய்திகளில் முதல் செய்தியாக பூநகரி முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததையே மணிக்கு ஒரு தடவையாக தெரிவித்து வந்தன. (ஓ-எ)

## மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 12

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் அதிரடித் தாக்குதலை அடுத்து சாவகச்சேரி, உட்பட தென்மராட்சியின் சில பகுதிகளில் இருந்து நேற்று அதிகாலை முதல் மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்தனர். இதனால் நேற்று தென்மராட்சிப் பகுதியில் பதற்றம் நிலவியது.

பூநகரிப் பகுதியில் இடம்பெற்ற விமான மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் புதன் நள்ளிரவு முதல் நேற்று காலை வரை தென்மராட்சி பகுதிகள் அதிர்ந்தபடி இருந்தன. யாழ். நகரப் பகுதியும் கூட அதிர்ந்தது.

விமானப் படை அகோரக் குண்டுத் தாக்குதலை நடத்தியபடி இருந்ததால் கேரதிவுப் பாதையில் தனங்கிளப்புக்கு அப்பால் செல்ல முடியாத நிலை நேற்று முற்பகல் வரை நிலவியது. ஹெலிகளும், பொம்மர்களும், சுப்பசொனிக் விமானங்களும் மாறி மாறி தாக்குதலை நடத்தின. (ஓ-5)

## தமிழீழ பொதுக்கல்வி தேர்வு பெறுபேறுகள் டிசம்பரில்

யாழ்ப்பாணம், நவ. 12

வட தமிழீழத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நடைபெற்ற தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் பெறுபேறுகள் எதிர் வரும் டிசம்பர் 15 ஆம் திகதி பாடசாலைகள் ஊடாக வெளியிடப்படும்.

இவ்வாறு தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

இத் தேர்விற்கு கடந்த வருடம் பதினாறாயிரம் மாணவர்கள் தோற்றினர். ஆனால் இம் முறை 16 ஆயிரத்து 500 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

விடைத்தாள்கள் அனைத்தும் கூடுதல் ஆசிரியர்களின் துணையுடன் ஐந்து நாள்களில் மதிப்பிடப்பட்டன.

முதன் முறையாக விஞ்ஞான செய்முறைத் தேர்வு இவ்வாண்டு நடத்தப்பட்டது. இச் செய்முறைத் தேர்வு ஆயிரத்து 500 ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் 300 பரீட்சை நிலையங்களில் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்பட்டது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான விசேட பரீட்சை தற்போது நடைபெறுகிறது. யாழ்தேவி இராணுவநடவடிக்கையினால் மூன்று பரீட்சார்த்திகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த விசேட பரீட்சை இம்மாதம் 13 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வின் மூலம் மாணவர்கள் ஐந்து மாதங்கள் முன்னதாகவே சென்ற வருடம் உயர்தரவகுப்பில் கல்விகற்க அனுமதி பெறமுடிந்தது. அத்துடன் அழகியற் கலைக்குரிய செயல்முறைப் புள்ளியும் ஏனைய பாடங்களுடன் இணைத்து டிசம்பர் 15 ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## பரிசளிப்பு வைபவம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டு போட்டிகளின் பரிசளிப்பு வைபவம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்துக்கு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. பாலகுமாரனும் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பைச் சேர்ந்த திரு. இன்பனும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்கள் வழங்குவார்.

யாழ். கல்வி திணைக்கள உடற்கல்வி விளையாட்டுத் துறைப் பிரிவால் நடத்தப்பட்ட வலைப்பந்து, மென்பந்து, கிரிக்கெட், மேசைப்பந்து, பூப்பந்து, சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்படும். (இ-3)

### இன்று

வலி – வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட சுகாதாரப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு செயலர் காரியாலயத்தில் நடைபெறும். (இ-3)

★ ★ ★

புனித சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (க-17)

★ ★ ★

கோப்பாய் சிமெந்துக் கட்டட தொழிலாளர் சங்கத்தின் பாய் உற்பத்தித் தொழிற்சாலை திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். (க-11)

★ ★ ★

வடமராட்சியில் கோட்ட மட்டத்திலான ஆரம்பக்கல்வி மூல வள நிலையம் இன்று வெள்ளிக்கிழமை வடமராட்சி கரவெட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் திறந்து வைக்கப்படுகின்றது. (க-155)

## ஒரு தொகுதி படையினருக்கு மாதகலில் தீவிர பயிற்சி?

படைகளுக்கு திரட்டப்பட்டவர்களில் ஒரு தொகுதியினருக்கு மாதகல் பகுதியில் தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த மாதங்களில் படையில் சேர்க்கப்பட்டவர்கள் உடனடியாக வடக்கு கிழக்கு யுத்த முனைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

யாழ். மாவட்டத்துக்கு இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் ஒரு தொகுதியினருக்கு மாதகல் பகுதியில் மூன்று இடங்களில் வைத்து தீவிர பயிற்சி அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

காலை முதல் இரவுவரை துப்பாக்கி குட்டுச் சத்தங்கள் கேட்டபடி உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (த-3)

## மு. க. சார்பில் வழக்கறிஞர்

ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமான சதித்திட்டம் குறித்து விசாரணை நடத்தும் ஜெயின் ஆணைக்குழுவின் முன், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் சார்பில் வழக்கறிஞர் ஒருவர் தெரிபடுவார்.

இம் மாதம் 16 ஆம் திகதி விசாரணை மீண்டும் ஆரம்பமாகும்போது தமது வழக்கறிஞர் சமுகமளிப்பார் என்று திரு. கருணாநிதி கோவையில் செய்தியாளர்களிடம் கூறினார். (ஓ-எ)

## இடம் பெயர்ந்தோருக்கான பாடசாலை உபகரணங்கள்

### யுனிசெவ் தொடர்ந்து வழங்கும்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகளை தொடர்ந்து வழங்குவதாக யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 12 வரையான மாணவர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படும். அவை அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக விநியோகிக்கப்படும்.

ஏற்கனவே 'யுனிசெவ்' நிறுவனம் 6 ஆயிரத்து 873 உபகரணப் பொதிகளை வழங்கியிருந்தது. அவை இடம் பெயர்ந்தோர் முகாம்களைப் பராமரிக்கும் நிறுவனங்கள் ஊடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையச் செயலாளர் தெரிவித்தார். (இ-5)

## தாக்குதல் குறித்து விசாரிக்க ஆணைக்குழு நியமனம்?

பூநகரி முகாம் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் புகுந்தது எப்படி? படை முகாம்களுக்கு உண்மையில் என்ன நடந்தது? மேஜர்கள், கப்டன்கள் போன்ற இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டது எப்படி?— என்பவை குறித்து ஆராய ஆணைக்குழு ஒன்றை அரசு நியமிக்கும் என கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்று அதிகாலை அறிவித்தது.

இதற்கு முன்னரும் ''ஜானகபுர'' தாக்குதலில் 60 முதல் 70 படையினர் கொல்லப்பட்டது குறித்து ஆராய விசாரணைக்குழு ஒன்றை அரசு நியமித்தது என்றும்—

ஆனால் எதிர்பார்க்கப்பட்ட தகவல்கள் ஏதும் அந்தக் குழுவின் விசாரணைகளில் வெளிவரவில்லை என்றும்—

அந்த செய்தி ஏஜென்ஸி குறிப்பிட்டது. (உ-3)

### உள்ளூராட்சித் தேர்தல்:

## கொழும்பு தமிழ்க் கட்சிகள் குழுக்களிடையே வேறுபாடு

ஜனாதிபதி கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவின் பகுதிகளிலும் நடத்தப் போவதாக அறிவித்துள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றி கொழும்புத் தமிழ்க்கட்சிகளும் தமிழ்க் குழுக்களுக்கும் இடையில் பலமான கருத்து வேற்றுமைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் அல்லது வடக்கு-கிழக்கு மாகாணத்தை நிர்வகிக்க இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனத் தமிழ்க் கட்சிகள் தொடர்ந்து அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் அரசியல் தீர்வொன்றை முன்வைக்காத நிலையில் அரசாங்கம் நடத்தும் உள்ளூராட்சித் தேர்தல்களில் எப்படிக் கலந்து கொள்ள முடியும்? ஆகையால் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் சில கருதுகின்றனவாம்.

தமிழ்க் கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தல்களை பகிஷ்கரித்தால் ஆளும் கட்சி உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றிவிடும். ஆகையால் உள்ளூராட்சித் தேர்தல்களை ஏனைய தமிழ்க்கட்சிகள் பகிஷ்கரித்தாலும் அதில் நாம் போட்டியிடுவோம் என பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க் குழுக்கள் கருதுகின்றன என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-க)

## வெள்ள மரணம் 40 ஆக உயர்வு

தமிழகத்தில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்து இருப்பதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## இரத்தம் வழங்க முண்டியடிப்பு

பூநகரி இராணுவ முகாம் தாக்கப்பட்டதை அடுத்து காயமடைந்தவர்களுக்கு இரத்தம் வழங்க யாழ். ஆஸ்பத்திரியில் இன்று முற்பகல் பலர் முண்டியடித்தனர்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி உட்பட பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் தாமாகவே முன்வந்து இரத்தம் வழங்கினர்.

## சர்வதேச ரீதியில் முக்கியத்துவம்

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் பற்றி சர்வதேச செய்தி நிறுவனங்கள் நேற்று முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன. பி. பி. ஸி., வொய்ஸ் ஒவ் அமெரிக்கா, ஆஸ்திரேலிய வானொலி மற்றும் இந்திய வானொலி என்பன தாக்குதல் தொடர்பான செய்திகளை வெளியிட்டபடி இருந்தன.

இராணுவத்துக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் இழப்புக்களை செய்தி ஏஜென்ஸிகள் பெரிதாக விமர்சனம் செய்தன.

## உலகில் அகதிகள் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்வு!

### 130 பேருக்கு ஒருவர் இன்று அகதி நிலையில்

உலகம் முழுவதிலும் உள்ள அகதிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நெருக்கடி போன்ற பின்னணியில் இது போன்ற அறிக்கை ஒன்றை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வெளியிட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

உலகம் முழுவதிலும் 20 ஆண்டுகளுக்கு முன்னர் 25 லட்சத்துக்கும் குறைவானவர்களே அகதிகளாக இருந்தார்கள். கடந்த ஆண்டின் இறுதியில் இவர்களது எண்ணிக்கை ஒரு கோடி 82 லட்சமாக அதிகரித்தது.

மனித உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை, சிறுபான்மையினர் மீதான அடக்குமுறை, உள்நாட்டு மோதல்கள், துன்புறுத்தல்கள் ஆகியவற்றின் காரணமாக உலகில் உள்ள ஒவ்வொரு 130 பேரிலும் ஒருவர் அகதியாகியுள்ளார்.

அகதிகள் சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும்போது மக்கள் உயிர்தப்பி ஓடும் நிலைமை உருவாவதைத் தடுப்பதற்கு கவனஞ் செலுத்தப்படவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# படையினரின் இதயம் போன்ற பகுதியைக் கூட அடித்து நொருக்கும் வல்லமை புலிகளிடம்

''விடுதலைப் புலிகளின் பதிலடித் தாக்குதல்'' — என்ற தலைப்பில் பி.பி.ஸியின் இந்தியசைப் பிரிவைச் சேர்ந்த நீற்றாபெயின் எழுதிய ஆய்வுரைக் கண்ணோட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு.

''பூநகரி இராணுவ கடற்படை முகாம்களில் ஏறக்குறைய 2 ஆயிரம் இராணுவத்தினரும் கடற்படையினரும் தங்கியிருந்தனர்.

''பேச்சுக்கான கதவை அரசு மூடி விட்டது என்று விடுதலைப் புலிகள் குறை கூறினார்கள். கடந்த வாரம் தான் மீண்டும் ஒரு பெரிய தாக்குதலை நடத்தப் போவதாக விடுதலைப் புலிகள் எச்சரித்திருந்தனர்.

ஜனாதிபதி [illegible] பதவிக்கு வந்த புதிதில் விடுதலைப் புலிகளுடன் [illegible] நடத்தப்போவதாகக் கூறிவந்தார். ஆனால் சில மாதங்கள் கழித்து அவரது பேச்சில் திடீர் என்று மாற்றம் ஏற்பட்டது.

வடபகுதியில் இனப் பிரச்சினை ஏதுமில்லை; வெறும் பயங்கரவாதம் தான் காணப்படுகிறது என்று அவர் சுருதிபேதம் செய்து பேசத் தொடங்கி விட்டார். அவரது இப் பேச்சை விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்ப் பிரகடனமாகவே பலரும் விமர்சித்தார்கள்.

கவர்ச்சிகரமான தலைவரைக் கொண்ட அதாவது திரு. வே. பிரபாகரன் தலைமையில் இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு போர் முழக்கமாகவே ஜனாதிபதியின் இப் பேச்சு சித்திரிக்கப்பட்டது.

சமீபகாலங்களில் இராணுவத்தின் கைஓங்குவதாகவே [illegible]

ஆனால் இப்போது விடுதலைப் புலிகள் [illegible] பாரிய தாக்குதல், விடுதலைப் புலிகள் ஓய்ந்து விட்ட படையல்ல, இன்றும் இராணுவத்தின் இதயம் போன்ற இடத்தில் கூட அவர்களுக்கு அடித்து நொருக்கும் வல்லமை உண்டு என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகள் கூட இடத்தைப் பிடித்து வைத்துக் கொண்டு பாதுகாப்பு எல்லைகளை உருவாக்கும் உத்தியை சரியான உத்திதானா என்று கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

முன்பெல்லாம் இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை தாக்கி அவர்களை சண்டைக்கு இழுத்து இயன்றளவு அவர்களை கொன்றுவிட்டு, தம்முடைய தளங்களுக்குத் திரும்பி விடுவார்கள். இதுவே அவர்களின் பழைய உத்தி. இதனால் அவர்கள் கட்டுப்பாட்டில் வைத்து இருந்த இடம் சிறியதாக இருந்தது. அதனால்தான் அவர்களுக்கு எளிய காரியமாகவும் அது இருந்தது.

இப்போது படையினர் பூநகரி தளத்தை இழந்து நிற்பதால் அரசின் அரசியல் கொள்கைகளே கேள்விக்குறியாகிவிட்டதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

அடுத்த ஜனவரியில் கிழக்கில் நடத்தப்படவுள்ள தேர்தலுக்கு பாதுகாப்பு கொடுப்பது என்பது இப்போது கஷ்டமான காரியம் என்று அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தேர்தலை நடத்தி தமது அரசியல் திட்டங்களை நிறைவேற்றினால் விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி விடலாம் என்று அரசு நம்பியிருந்தது. இப்போது பூநகரி படை முகாமின் வீழ்ச்சியால் அரசின் அந்தக் கனவு நனவாகுமா என்பதே சந்தேகம்தான்.

மிக விரைவாக விடுதலைப் புலிகளை அரசுப் படைகள் எதிர்கொண்டு வென்றால் அன்றி காற்றில் பறந்துவிட்ட இராணுவத்தின் தன்னம்பிக்கை மீண்டும் வரும் வாய்ப்பு பிரகாசமாக இல்லை.

இப்படி அந்தக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

**காடு வளர்க்க கைகொடுத்தல் இந் நாட்டு சூடு தணிக்கும் செயல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி இலத்திரனியல் கண்காட்சி

மேற்படி கண்காட்சி மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

(28011)


# பயங்கரவாதப் பிரச்சினை என டி. பி. கூறியதற்குப் பதிலடி

கொழும்பு, நவ. 12 இனப்பிரச்சினை இல்லை; பயங்கரவாதப் பிரச்சினை தான் உண்டு என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறிவருவதற்கான பதிலாக விடுதலைப் புலிகளின் பூநகரித் தாக்குதலைஎடுத்துக்கொள்ள முடியும்.

அது மட்டுமல்ல, அதற்கு மேலாக குடா நாட்டில் தேவையான நேரத்தில் தம்மால் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்ற செய்தியை அரசுக்கு விடுதலைப் புலிகள் அனுப்ப கடைப்பிடித்த வழி இதுவாகும் என்று பத்திரிகையாளரான அமல் ஜெயசிங்கா பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இராணுவத்தின் நிலைப்பாட்டிற்கு விடுதலைப் புலிகள் அளித்த பதிலாகவும் இத்தாக்குதலை எடுத்துக் கொள்ள முடியும் என்றும் அவர் சொன்னார். (ஒ-எ)

# தளபதிகள் வடக்கே விரைவு

பூநகரித் தாக்குதல் சம்பவத்தை அடுத்து சிரேஷ்ட இராணுவத் தளபதிகள் கொழும்பிலிருந்து வட பகுதிக்கு விரைந்துள்ளனர் என்று பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்தார்.

தாக்குதலில் உயிரிழந்த படையினரின் சடலங்களையும் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த கேந்திர படை முகாமையும் திருப்பி எடுப்பதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் சிரேஷ்ட படைத் தளபதிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

# படைக்கு பாரிய அழிவு; தளபதிகள் வர்ணிப்பு

பூநகரி முகாமை கைப்பற்றுவதற்கு விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பை ''பாரிய அழிவுச் சம்பவம்'' என்று இராணுவத் தளபதிகள் கொழும்பில் வர்ணித்தனர்.

## கொழும்பு நகரப் பகுதிகளில்

# நினைத்த மாத்திரத்தில் தமிழர் கைதாகின்றனர்

## சபையில் தமிழ் எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 12 கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் நினைத்த மாத்திரத்தில் கைது செய்யப்படுகின்றனர் என்றும்—

பொறுப்பான பதவிகளை வகிக்கும் தமிழர்களைக் கூட பொலீஸார் விட்டு வைக்க வில்லை என்றும்—

ஈ. பி. ஆர். எல். எப். எம். பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

சட்டத்தையும் சமாதானத்தையும் பேணுவது அரசின் கடமையாகும். எனினும் தமிழர்களை நினைந்தபடி கைது செய்வதும் கடத்துவதும் முரண்பாடான செயலாகும். இத்தகைய் போக்கை அரசு உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ-6)

## மத்திய கல்லூரியில் தமிழ்விழா

யாழ்ப்பாணம், நவ. 12 யாழ். மத்திய கல்லூரியின் தமிழ்விழா இன்று நடைபெறுகிறது. யாழ். பல்கலைக் கழக கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். விழாவில் தமிழ்த்தாயின் திருவுருவப் படம் திரை நீக்கம் செய்யப்படும்- (அ)

## இராணுவத்துக்கு...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ விடுதலைப் புலிகளினால் நாகதேவன்துறை கடற்படை முகாம் அழிக்கப்பட்டு பூநகரி இராணுவ முகாம் பிடிக்கப்பட்டு விட்டதாக இராணுவ தரப்பு அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஒப்புக் கொண்டுள்ளனர்.

★ விடுதலைப் புலிகள் அசுர பலத்துடன் இப் பாரிய தாக்குதலை நடத்தியுள்ளனர்.

★ பூநகரித் தாக்குதல் மூலம் வடபகுதியை பெருநிலப்பகுதியுடன் இணைக்கும் யாழ். வாவியில் தமது கட்டுப்பாட்டை விடுதலைப் புலிகள் பலப்படுத்தியுள்ளனர்.

★ தப்பி ஓடிய படையினர் மீட்கப்பட்டு விட்டனரா அல்லது விடுதலைப் புலிகளிடம் சிக்கி விட்டனரா என்பது தெரியவில்லை.

★ பூநகரியில் பெரும் தாக்குதல் ஒன்று நடந்தது என்று மட்டுமே பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. வேறு எந்த விவரமும் வெளிவராதது இத்தாக்குதல் எவ்வளவு மோசமானது என்பதையே காட்டுகிறது.

★ விடுதலைப்புலிகள் பின்னடைவு கண்டுள்ளனர் என்றும் தாங்கள் முன்னணியில் உள்ளதாகவும் இராணுவ அதிகாரிகள் தம்பட்டமடித்து வந்ததை பூநகரித் தாக்குதல் பொய்யாக்கிவிட்டது.

★ சமாதான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் நடந்த இத்தாக்குதல் இருதரப்பினரின் போக்கையும் மேலும் கடினமாக்கும்.

★ இனப்பிரச்சினை நாட்டில் இல்லை என்று கூறிவரும் ஜனாதிபதி பயங்கரவாதிகள் என்று அடிக்கடி விடுதலைப்புலிகளை அழைக்கின்றார். விடுதலைப் புலிகள் நசுக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் விருப்பத்தை நிறைவேற்றுவது என்பது இயலாத காரியமாக இருக்கக் கூடும் என்று அவரது பாதுகாப்புப் படையினர் காட்டியுள்ளனர். (இ-எ-6)

## சாவகச்சேரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழவகைகள் போன்றவை சிதறிப் போய்க் கிடந்தன.

குண்டு வீச்சில் காயமடைந்தவர்களில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போர் விவரம் வருமாறு:-

எஸ்,தியாகராசா (38வயது) புத்தூர், மார்க்கண்டு குணசிங்கம் (23 வயது) அல்லாரை, சோமசுந்தரம் நேசதுரை (28 வயது) மீசாலை வடக்கு, சுப்பிரமணியம் விமலேஸ்வரன் (14 வயது) கச்சாய் வீதி, பொன்னம்மா (75 வயது) வயாவிளான்,

சதீஸ்குமார் (22 வயது) சாவகச்சேரி, எஸ். சிறீபவன் (18 வயது) பொலிகண்டி, கே. யோகம் (26 வயது) சாவகச்சேரி இவர்கள் மூவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-ரி-3-15)

## பலாலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல்லுக்குப் பயந்து பாதுகாப்புத் தேடி ஓடிக்கொண்டிருந்த போதே — வீதியில் விழுந்த ஷெல்லுக்கு — இலக்கானார்கள்.

இராணுவ முகாம்களில் இருந்து நேற்று பகல்வேளை படையினர் யாழ். நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தியபடி இருந்தனர்.

சில ஷெல்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் விழுந்து வெடித்துள்ளன,

இதனால் மக்கள் பதற்றத்துடன் காணப்பட்டனர்.

# பல்கலைக்குரிய 58 பரல் ம.எ. இதுவரை வந்து சேரவில்லை

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கவென பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதித்த 58 பரல் மண்எண்ணெய் இரு மாதங்களாகியும் இங்கு வந்துசேரவில்லை என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக்கழக மாணவர்கள் கல்விபயில வசதியாக மாதாந்தம் 58 பரல் மண்எண்ணெய்யை கப்பலில் எடுத்துச்செல்ல பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கியிருந்ததாகவும் —

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். பல்கலைக் கழகஅதிகாரிகளின் அசிரத்தையால் கடந்த இரு மாதங்களுக்கான கோட்டா மண்எண்ணெய் இங்கு அனுப்பப்படவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அரசஅதிபருடன் தொடர்பு கொண்டு 58 பரல் மண்எண்ணெய் பெற்று மாணவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-3)

## கப்பல் சேவை இடைநிறுத்தம்

# பயணிகள் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா

யாழ்ப்பாணம், நவ. 12 இம்மாத நடுப்பகுதியில் கப்பல் சேவைகள் இடைநிறுத்தப்பட விருப்பதால், கப்பலில் கொழும்பு செல்வதற்காக எவரிடமும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அரச அதிபர் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கப்பலில் பிரயாணம் செய்வதற்கு ஏற்கனவே ஏராளமான விண்ணப்பங்கள் செயலகத்துக்கு கிடைத்துள்ளன.

இம்மாதம் நடுப்பகுதியில் இருந்து கப்பல் சேவை இடைநிறுத்தப்படுவதால், எக்காரணம் கொண்டும் எவரிடமிருந்தும்புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-3)

## தீபாவளி, கந்தசஷ்டி

யாழ்ப்பாணம், நவ. 12 இன்று ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமையாகும். சைவ ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். முருகன் ஆலயங்களில் சுவாமி வீதியுலா வந்து திருவிழா இடம்பெறும்.

நாளை தீபாவளி தினம் கொண்டாடப்படும். தீபாவளியை முன்னிட்டும் ஆலயங்களில் விசேட பூசைகள் இடம் பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முருகன் ஆலயங்களில் கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகும். ஆறு நாட்களும் கந்தபுராணப் படிப்பும் இடம்பெறும். (அ-28-30)


## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாளை சனிக்கிழமை (13-11-93) விஞ்ஞான பிரிவு வகுப்புகள் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

—நிர்வாகி.

(சி-6542)



## அறிவித்தல்

**94, 95 A/L**

வகுப்புக்கள் யாவும் **13-11-1993** சனிக்கிழமை தீபாவளி தினத்தன்று வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

நிர்வாகி,

**NEW SCIENCE HALL**

KANNATHIDDY ROAD, JAFFNA.

(சி-6544)



## கலை, வர்த்தகக் கல்லூரி

**C. C. A.**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

நாளை 13-11-1993 சனிக்கிழமை சகல வகுப்புகளும் நிறுத்தப்பட்டு வழமை போல் 14-11-1993 ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் என அறியத்தருகிறோம்.

- நிர்வாகி.

[சி-6541]



## "துர்க்கா" வெளியீட்டு விழா

**19-11-1993** வெள்ளியன்று நிகழும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றேன்.

பிரதம ஆசிரியர்

(28016)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா புஸ்பராணி

திருமதி கந்தையா புஸ்பராணி காலமானார். இவர் மானிப்பாய் கிழக்கு இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் கந்தையாவின் அன்பு மனைவியும், கௌரி (கனடா), சாவித்திரி, ராஜிற் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய செல்வநாயகத்தின் மைத்துனியுமாவார். இவரின் இறுதிக் கிரியை இன்று வெள்ளிக்கிழமை 10 மணிக்கு பிப்பிலி மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

தகவல்;
K. கந்தையா
(கணவர்)

கௌரி மகால்,
மானிப்பாய் கிழக்கு.
மானிப்பாய்.

(6600)

## K. V. துரைராசா

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த K.V. துரைராசா 8-11-93 இல் காலமானார்.

இவர் இரத்தினம்மாவின் (கனடா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகலிங்கம், K.V.T. மகாலிங்கம் (கனடா), காலஞ்சென்ற சிவலிங்கம், அற்புதலிங்கம், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் (ஜேர்மனி), சுந்தரலிங்கம் (கனடா), தவராணி (கனடா), நிர்மலா (கனடா), புவனேஸ்வரன் (கனடா), சிவனேஸ்வரன் (நோர்வே), ரோகினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னம்மா (மட்டக்களப்பு), கேதீஸ்வரி (கனடா), மங்களேஸ்வரி, ஜெகசோதி, இந்திராணி (கனடா), பிருந்தாவதி (கனடா), காலஞ்சென்ற அமிர்தலிங்கம், தயாநிதி (கனடா), தயாகுலேஸ்வரி (கனடா), சிவகுமார் (கனடா) ஆகியோரின் மாமனாரும், —

குணசேகர் (கனடா), குணசீலன் (மட்டக்களப்பு), விஜி, விஜயந்தன், வினோத், சுஜி, சர்மிளா, சகிலா, சங்கீதா, சதீஸ், அகிலன், அமுதா, அஜந்தா, பிரதீப், பிரசாந்தி, அபினா, டசிக்கா, ஜெசிக்கா, தனுஷியா ஆகியோரின் அன்புப் பேரனும், கந்தையா, காலஞ்சென்ற முத்தையா, இரத்தினம், இராசையா, பிள்ளையம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேஸ்வரி, நடராசாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-11-93 மாலை 4.00 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அற்புதலிங்கம் (அப்பன்)
(மகன்)

பொற்பதி வீதி.
கொக்குவில்.

(சி-2044)

## கனகசபை கந்தையா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகசபை கந்தையா 7-11-93 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற பொன்னம்பலம், சிவஞானம், ஆகியோரின் சகோதரரும் சரவணபவன், திருநாவுக்கரசு, பூரணேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் சிறிய தந்தையாரும் கனகரட்ணம், மகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் விஜயமாலினி - ஆனந்த நடேசன், ஜெயந்தி-ஞானச்சந்திரன், வசந்தி, சிற்பரன், நளாயினி, அபிராமி ஆகியோரின் பேரனும் லக்ஷனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-11-93) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி மகேஸ்வரி-சரவணபவன்

திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(27988)

## அம்பலவாணர் ஆறுமுகதாஸ்

வேலணை கிழக்கு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அம்பலவாணர் ஆறுமுகதாஸ் (முன்னைநாள் கொள்வனவு உத்தியோகத்தர் - வேலணை ப. நோ. கூ. சங்கம்) 10-11-1993 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - தங்கமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லப்பா-பொன்னம்மாவின் அன்பு மருமகனும், மங்கயக்ர்கரசியின் அன்புக் கணவரும், முரளீதரன் (சுவிஸ்), பாலமுரளி (ஜேர்மன்), கோபி (லண்டன்), வசந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தருமலிங்கம் (இளைப்பாறிய தபாற் சேவையாளர் அஞ்சல் அலுவலகம், வேலணை), காமாட்சி, செல்லமுத்து, திருக்கேதீஸ்வரி, கனகம்மா, செல்லம்மா, சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம்சென்றவர்களான இராசம்மா, ஐயாத்துரை, வேலாயுதபிள்ளை, கோபாலபிள்ளை, கனகசபை மற்றும் இரத்தினத்தின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் துன்பியல் நிகழ்வுகள் 11-11-1993 இல் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. தருமலிங்கம்

இல. 466/1, மூத்ததம்பி அவெனியூ,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(28915)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நாகேந்திரம் கிருஷ்ணானந்தன்

தமிழன்னையால் படைப்பு: **10-01-1951**

தமிழின விரோதிகளால் அழிப்பு: **12-11-1988**

''உந்தன் வழி ஒன்று தான்
எங்கள் வழி என்று நாம்
நேர்மை ஒருநாளும் தவறாமல்
நடைபோடுவோம்"

குடும்பத்தினர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

இல. 10, கச்சேரி நல்லூர் வீதி.
யாழ்ப்பாணம்.

(சி-6354)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12-11-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org